# இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் - 2011

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் 2011 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) இலங்கைக் கணக்கீட்டு நியம இலக்கம் 18 இன் பிரகாரம் செயற்படாதிருந்த சந்தர்ப்பங்கள்:

(i) ரூபா 4,198,331 கிரயமான தளபாடம் மற்றும் பொருத்திகள், ரூபா 1,236,497 கிரயமான கணனி உப பாகங்கள் மற்றும் ரூபா 28,513 கிரயமான அலுவலக உபகரணங்கள் என்பவற்றை மீள் பெறுமதி செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) ரூபா 73,625 கிரயமான அலுவலக உபகரணங்களின் கிரயத்தினை விஞ்சி ரூபா 12,269 தொகையினால் பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கைக் கணக்கீட்டு நியம இல. 03 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்கூற்றுக்களில் குறிப்புக்களின் கீழ் அசாதாரண விடயங்கள் வெளிப்படுத்தப்பட வேண்டியமை காட்டப்பட்டிருந்த போதிலும் கூட்டுத்தாபனத்திற்கு நீண்ட காலத்திலிருந்து கிடைக்க வேண்டியிருந்த ரூபா 67,154,145 தொகையான திறைசேரி வைப்பு வட்டி தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 1.2.2 பெறவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2011 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலான கணக்குகளின் பிரகாரம் இறக்குமதி பட்டியல்களின் மீது செலுத்தப்பட்ட முற்பணங்களின் மீதி ரூபா 34,958,636 ஆகக் காணப்பட்டதுடன் அம் முற்பணம் 05 முதல் 09 வருடங்கள் வரையான காலப்பகுதியில் தீர்க்கப்படாதிருந்த முற்பணமாகும். எவ்வாறாயினும் இம் மொத்தத் தொகைகளுக்காகவும் ஐயக்கடனுக்கான ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) விலாசிதா நிவச இற்காக இழப்பீடு செலுத்துவதாக திம்பிரிகஸ்யாய பிரதேச செயலாளர் 2010 ஆகஸ்ட் 10 ஆந் திகதிய கடிதம் மூலம் அறிவித்திருந்த போதிலும் கணக்காய்வுத் திகதி வரை அது கிடைத்திருக்காததுடன் விலாசிதா நிவச இன் ரூபா 208,973,030 தொகையான கிரயம் கிடைக்க வேண்டிய காணி முதலீடாக கணக்குகளில் காட்டப்பட்டிருந்தது.

### 1.2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுக்கான தொடர்பு | இணங்காமை |
| --- | --- |
| (அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 11(பி) பிரிவு | கூட்டுத்தாபனத்தின் பணத்தினை வெளிநிறுவனங்களில் முதலீடு செய்யும் போது நிதி, திட்டமிடல் அமைச்சரின் அங்கீகாரம் பெறவேண்டியிருந்த போதிலும் அவ்வாறான அங்கீகாரமின்றி 2011 ஆம் ஆண்டில் ரூபா 805,824,872 தொகையான பணம் முதலீடு செய்யப்பட்டிருந்தது. |

| | |
|---|---|
| (ஆ) 2005 திசெம்பர் 19 ஆம் திகதிய பீஈடீ 33 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | மேலதிகப் பணம் அரசாங்க வங்கிகளில் முதலீடு செய்ய வேண்டியிருந்த போதிலும் அதற்கு முரணாக ரூபா 9,000,000 தொகையான பணம் தனியார் வங்கிகளில் முதலீடு செய்யப்பட்டிருந்தன. |
| (இ) 2000 சனவரி 31 ஆம் திகதிய பீஎப்/பீஈ/6 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் 24 ஆம் பிரிவு | உழைக்கும் போதான வரி உரிய ஊழியர்களினால் செலுத்த வேண்டியிருந்த போதிலும் ரூபா 560,432 தொகை கூட்டுத்தாபன நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஈ) கொள்வனவு வழிகாட்டிக் கோவை - 2006 | |
| (i) 3.5 ஆம் பந்தி மற்றும் கொள்வனவு செயற்பாட்டுக் கோவையின் 2.14.1 ஆம் பந்திக்குரிய 2008 ஏப்ரல் 11 ஆந் திகதிய 16 ஆம் இலக்க திருத்தம் | நிபந்தனைகளுக்கு முரணாக நேர் ஒப்பந்த முறைமை கடைப்பிடிக்கப்பட்டு பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. |
| (ii) 5.4.4 ஆம் பந்தி | நிபந்தனைகளுக்கு முரணாக 10 சந்தர்ப்பங்களில் 30% இற்கும் 100% இற்கும் இடையிலான அளவில் முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது. |
| (iii) 4.3 ஆம் பந்தி | அலுவலக சுற்றாடலை புனரமைப்பதற்கு ரூபா 2.5 மில்லியன் தொகைக்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும் மொத்தக் கிரய மதிப்பீடொன்று கொள்வனவு மாதிரிகளினால் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. |

### 1.2.4 வெளிப்படையான ஒழுங்கீனங்கள் / முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மேற்கொள்ளப்பட்ட பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் பௌதீக ரீதியாக காணப்படாத நிலையான சொத்துக்களின் பெறுமதி ரூபா 398,438 ஆக இருந்தது. இச் சொத்துக்களில் அதிகமானவைகள் பௌதீக ரீதியில் காணப்பட்ட போதிலும் அதன் அடிப்படை உருவம் காணப்படாதிருந்ததாக தலைவர் அறிவித்திருந்தார்.

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

மீளாய்வாண்டில் கூட்டுத்தாபனத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் நிதிசார் விளைவு ரூபா 89,190,543 தேறிய இலாபமொன்றாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான இலாபம் ரூபா 54,439,370 ஆக இருந்தமையால் தேறிய இலாபம் ரூபா 34,751,173 ஆல் அதிகரித்திருந்திருந்தது. அதற்காக செயற்பாட்டு வருமானம் ரூபா 16,861,103 ஆல் அதிகரித்தமை மற்றும் வருமான வரிச் செலவினம் ரூபா 6,342,116 தொகையினால் குறைவடைந்தமை பிரதானமாகத் தாக்கமளித்திருந்தன.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

மீளாய்வாண்டில் வரிக்கு முன்னரான தேறிய இலாபம் ரூபா 113,249,397 ஆன போதிலும் செயற்பாட்டு நடவடிக்கைகளின் விளைவு ரூபா 46,983,084 ஆக இருந்ததுடன் ரூபா 66,266,313 தொகை ஏனைய வருமானமாக இருந்தது. அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் வரிக்கு முந்திய தேறிய மிகை ரூபா 108,187,543 ஆக இருந்த போதும் செயற்பாட்டு நடவடிக்கைகளின் விளைவு ரூபா 30,252,223 தொகையாக இருந்ததுடன் ரூபா 77,935,320 தொகை ஏனைய வருமானமாக இருந்தது. அதன் பிரகாரம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டிற்கான செயற்பாடுகளின் தேறிய மிகை 55% ஆல் அதிகரித்திருந்ததுடன் மொத்த தேறிய மிகை 64% ஆல் அதிகரித்திருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

**(அ) 2011 செயற்பாட்டு திட்ட இலக்கை எய்தல்**

பின்வரும் காப்புறுதிப் பத்திரம் மற்றும் பிணை என்பவற்றின் அளவுகளில் இலக்கிடப்பட்ட எண்ணிக்கையை அடைய முடியாதிருந்தது.

| காப்புறுதி பத்திரம் மற்றும் பிணைப் பொறுப்பு வகை | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் | | உள்ளவாறான எண்ணிக்கை | உள்ளவாறான எண்ணிக்கை மதிப்பிடப்பட்ட எண்ணிக்கையின் சதவீதமாக | பெறுமதி |
|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | பெறுமதி | | % | |
| | | ரூபா. மில்லியன் | | | ரூபா.மில்லி |
| ஏற்றுமதிக் கொடுப்பனவு காப்புறுதிப் பத்திரம் | 42 | 1,104 | 32 | 76 | 1,213 |
| கப்பலேற்றிய பின்னரான பிணைச் சான்றிதழ் | 18 | 650 | 10 | 56 | 354.9 |
| விமானப் போக்குவரத்துச் செலவின பிணைச் சான்றிதழ் | 2,150 | 357 | 1,452 | 68 | 180.9 |

மீளாய்வாண்டின் போது கப்பலேற்ற முன்னரான பிணைச் சான்றிதழ் முறைமை மற்றும் ஏற்றுமதி செயலாற்றல் பிணைச் சான்றிதழ் முறைமை தவிர்ந்த ஏனைய பத்திரங்கள் மற்றும் பிணைகள் விநியோகித்தல் தொடர்பாக இலக்கிடப்பட்ட எண்ணிக்கையில் மொத்தமாக அடைந்து கொள்ளப்பட்ட அளவு 56% இலிருந்து 76% வரையான வீச்சில் காணப்பட்டது.

**(ஆ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் காப்புறுதிப் பத்திரங்களையும் பிணைகளையும் குறைத்து வழங்குதல்**

| காப்புறுதிப் பத்திரம் மற்றும் பிணைகளின் வகை | 2011 | | 2010 | | சதவீதமாக |
|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | பெறுமதி | எண்ணிக்கை | பெறுமதி | |
| | | ரூபா | | ரூபா | % |
| விமானப் போக்குவரத்துச் செலவின பிணைச் சான்றிதழ் | 1,452 | 180,906 | 2,120 | 275,371 | 68 |

மீளாய்வாண்டின் போது விமானப் போக்குவரத்துச் செலவின பிணைச் சான்றிதழ் முறைமை தவிர ஏனைய பத்திரங்கள் மற்றும் பிணைச் சான்றிதழ்கள் விநியோகித்தல்களில் அதிகரிப்பொன்றைக் காணக்கூடியதாக இருந்தது.

**3.2 பதவியணியினர் நிருவாகம்**

2006 செப்தெம்பர் 22 ஆந் திகதிய முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் சுற்றுநிருப இல. 30 இன் பிரகாரம் கூட்டுத்தாபனத்தினால் பதவியணியினர் மீண்டும் தொகுதிகளாக்கப்பட்டு அதன் பிரகாரம் சம்பளத் திருத்தமொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிப்பும் நல் ஆளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

மீளாய்வாண்டிற்காக உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று தாபிக்கப்பட்டிருக்கவில்லை. உள்ளகக் கணக்காய்வுச் செயற்பாடுகள் உப ஒப்பந்த அடிப்படையில் செய்யப்பட்டிருந்தது.

### 4.2 கணக்காய்வுக் குழு

2003 யூன் 02 இன் பீஈடீ 12 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் 7.4.1 ஆம் பிரிவின் பிரகாரம் ஆகக் குறைந்தது 3 மாதங்களுக்கு ஒரு தடவை கணக்காய்வுக் குழுக்கூட்டம் நடைபெறவேண்டியிருந்த போதிலும் கூட்டுத்தாபனத்தினால் அவ்வாறு நடாத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.3 கொள்வனவுத் திட்டம்

மீளாய்வாண்டிற்கான கொள்வனவுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீடு செய்யப்பட்ட வருமானம், செலவினத்திற்கும் மற்றும் உள்ளவாறான வருமானம், செலவினத்திற்குமிடையே 20% முதல் 150% இற்கிடையே முரண்கள் அவதானிக்கப்பட்டமையினால் பாதீடானது வினைத்திறனுள்ள ஒரு முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது கூட்டுத்தாபனத்தின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) ஏற்றுமதிப் பட்டியல் மீதான முற்பணங்களை மீள அறவிடுதல்

(ஆ) செயல் நடவடிக்கைத்திட்டத்தின் பிரகாரம் இலக்குகளை எய்துதல்

(இ) மிகையான பணத்தை முதலீடு செய்தல்